ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1646/16 - 2010 මාර්තු 23 වැනි අඟහරුවාදා - 2010.03.23

*1646/16 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மேல் மாகாண அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகார சபை நியதிச் சட்டம்*

*மேல் மாகாண மாகாண சபையினால் 2010, பெப்புருவரி மாதம் 9 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு மேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் 2010 மாச்சு மாதம் 8 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட மேல் மாகாணத்தின் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மேல் மாகாண அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகாரசபை நியதிச் சட்டம் 2010, மாச்சு மாதம் 8 ஆந் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட வேண்டுமென மேல் மாகாண மாகாண சபையின் போக்குவரத்து, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், கலை மற்றும் கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு, கிராமிய அபிவிருத்தி நடவடிக்கை அமைச்சர் உப்பாலி கொடிகார ஆகிய நான் இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*உப்பாலி கொடிகார,*
*மேல் மாகாண சபையின் போக்குவரத்து, விளையாட்டு மற்றும்*
*இளைஞர் விவகாரம், கலை மற்றும் கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி,*
*உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு, கிராமிய அபிவிருத்தி நடவடிக்கை அமைச்சர்.*

*மேல் மாகாண போக்குவரத்து, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், கலை மற்றும் கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு, கிராமிய அபிவிருத்தி நடவடிக்கை அமைச்சு,*
*இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2010, மாச்சு 18.*

**2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகாரசபை நியதிச் சட்டம்**

*மேல் மாகாண அழகியற் கலையரங்கத்தினைமுகாமைத்துவம் செய்யவும் மற்றும் பராமரிக்கவும், நாடகங்களைக் காண்பிக்கவும், சங்கீத, இசை நிகழ்ச்சிகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை மேம்படுத்தவும் மற்றும் ஊக்கப்படுத்தவும் அதனோடு தொடர்புடைய இடைநேர்விளைவான கருமங்களை ஏற்பாடு செய்வதற்குமாக மேல் மாகாண அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகாரசபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கான நியதிச் சட்டமொன்றாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக :-*

*1. இந்த நியதிச்சட்டமானது 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகாரசபை நியதிச் சட்டம் என அழைக்கப்படலாம் என்பதுடன், மேல் மாகாண ஆளுநரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.* *குறுந்தலைப்பும் மற்றும் நடை முறைக்குவரும் தின மும்.*

## *1* ஆம் பாகம்

### மாகாண அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகார சபையை ஸ்தாபித்தலும் அதன் அமைப்பும்

*மேல் மாகாணத்தின் அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகார சபையை ஸ்தாபித்தல்.*

2. (1) (இதனகத்துப்பின்னர் ''கட்டுப்பாட்டு அதிகார சபை'' என்று அழைக்கப்படும்) மேல் மாகாணத்தின் அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகார சபை இங்கு ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டு அதிகார சபையானது (1) ஆவது உப பிரிவில் அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பெயரில் சட்டரீதியான நபர்கள் ஆகுவதுடன் அது இடையறா வழியுரிமையையும் மற்றும் பொது இலச்சினை ஒன்றையும் கொண்டு இருக்க வேண்டும். கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு மேலே (2) (1) உப பிரிவில் குறிப்பிடப்படும் பெயரில் அந்தக் கட்டுப்பாட்டு அதிகார சபைக்காக வழக்கு தொடரப்படலாம்.

*கட்டுப்பாட்டு அதிகார சபையின் அங்கத்தவர்கள்.*

3. (1) கட்டுப்பாட்டு அதிகார சபை கீழே காட்டப்படும் அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(அ) பதவி வழியில் நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) மேல் மாகாண சபையின் கலாசார விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் அவ்வமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் ;

(ஆ) மேல் மாகாண கலாசார விடயப்பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்படும் (இதனகத்துப்பின்னர் ''நியமிக்கப்பட்ட அங்கத்தவர்'' என்று அழைக்கப்படும்).

நிதி விடயப் பொறுப்பு அமைச்சின் இணக்கத்துடன் நியமிக்கப்படும் மாகாண திறைசேரியின் சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் ;

(ii) நாடகம், சங்கீதம், நாட்டியம் அல்லது திரைப்படம் போன்ற துறை ஒன்று அல்லது துறைகளில் சிறந்த அனுபவம் ஒன்று மற்றும் நிபுணத்துவம் ஒன்று உள்ள நபர்களில் இருந்து நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்கள் ;

(2) ஏதாவது ஆளொருவர் பாராளுமன்றத்தின், ஏதாவது மாகாண சபை ஒன்றின் அல்லது ஏதாவது உள்ளூராட்சிசபை ஒன்றின் உறுப்பினராகுமிடத்து அல்லது அவ்வாறான ஒருவராக நியமிக்கப்படுவாரேயானால் அவ்வாறான ஒருவர் கட்டுப்பாட்டு அதிகார சபையின் அங்கத்தவர் ஒருவராகச் செயற்படுவதற்கு தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) மேல் மாகாண சபையின் கலாசார விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களில் ஒருவர் அந்த கட்டுப்பாட்டு அதிகார சபையின் தலைவராக வேண்டும்.

*அங்கத்தவரின் பதவிக் காலம்.*

4. (1) (அ) ஏதாவது அங்கத்தவர் ஒருவரின் மரணம், இராஜினாமா அல்லது விலக்கப்படுதலின் காரணமாக பதவியானது வெற்றிடமாகினால் ஒழிய, அமைச்சினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவருக்கு மூன்று வருட காலம் பதவி வகிக்க முடியும், மேலும் அவர் அகற்றப்பட்டாலொழிய மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகைமை உள்ளவராதல் வேண்டும் ;

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை அமைச்சரினால் அப்பதவியில் இருந்து அகற்ற முடிவதுடன், அந்த உறுப்பினரின் மிகுதிக் காலத்திற்கு பதவி வகிக்க புதிய உறுப்பினர் ஒருவரை அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும் ;

(இ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் யாதாயினுமொரு உறுப்பினர் ஒருவர் நோய்வாய்பட்டதினால் அல்லது வேறேதாவது அங்கவீனம் ஒன்றினால் அல்லது இலங்கைக்கு வெளியில் இருந்ததினால் அல்லது வேறொரு காரணம் ஒன்றினாலோ மூன்று மாதங்களுக்கு குறையாத காலம் ஒன்றுக்கு அங்கத்துவப் பதவியில் காரியங்களை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பம் ஒன்றில்.

(i) உறுப்பினர், நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராயின் அதற்காக நடவடிக்கை எடுப்பதற்காக 3 (1) (ஆ) பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு வேறு நபர் ஒருவர் மேல் மாகாண சபையின் கலாசார விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும் ;

(ii) அங்கத்தவர் 3 (1) (அ) (i) மற்றும் (ii) துணைப்பந்திகளின் கீழ் காட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவராயின், அந்த உத்தியோகத்தரின் பதவியில் பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ள நபரையே அந்த உத்தியோகத்தருக்காக பதில் கடமையாற்ற நியமிக்கப்பட வேண்டும்.

(2) (அ) கட்டுப்பாட்டு அதிகார சபை கூடும் ஒவ்வொரு தினத்திற்குமாக அவ்வாறு கூட்டம் கூடும் தினத்திற்கு ஒவ்வொரு அங்கத்தவருக்கும் அமைச்சரினால் பணிக்கப்படும் ஊதியம் ஒன்று செலுத்தப்பட வேண்டும் ; கட்டுப்பாட்டு அதிகார சபையின் கூட்டம்.

(ஆ) கட்டுப்பாட்டு அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டுமென இந்த நியதிச் சட்டத்தின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட எல்லா விடயங்களும் இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடாத்தப்படும் கட்டுப்பாட்டு அதிகார சபையின் கூட்டங்களுக்கு வருகை தரும் அங்கத்தவர்களின் பெரும்பான்மை வாக்கின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் ;

(இ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் தலைவர் வருகை தந்திருந்தால், கட்டுப்பாட்டு அதிகார சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை வகிக்க வேண்டும். அவ்வாறான ஏதாவது ஒரு கூட்டமொன்றுக்கு தலைவர் வருகை தராத சந்தர்ப்பத்தில் வருகை தந்திருந்த அங்கத்தவர்களினால் அவர்களில் இருந்து ஒருவரை தலைமை தாங்குவதற்காகத் தெரிவு செய்துகொள்ள வேண்டும் ;

(ஈ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் கூட்டமொன்றின் நடப்பெண் மூன்று அங்கத்தவர்களாக வேண்டும் ;

(உ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் அங்கத்தவர்களுக்கிடையே வெற்றிடம் ஒன்று இருந்தபோதும் கட்டுபாட்டு அதிகார சபைக்கு இயங்க முடியும் ;

(ஊ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் செயற்பாடு ஒன்று, தீர்மானம் ஒன்று அல்லது நடவடிக்கை ஒன்று அதிகார சபையின் அங்கத்தவர்களின் ஏதாவது வெற்றிடம் ஒன்று காணப்பட்டதன் பேரில் அல்லது அதன் ஏதாவது ஒரு உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் காணப்பட்ட தவறொன்றின் காரணத்தினால் மட்டும் இரத்தாகியதாகக் கருதிக்கொள்ளக்கூடாது ;

(எ) கட்டுப்பாட்டு அதிகார சபையில் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் மூன்று கூட்டங்களுக்கு அறிவிப்பு ஒன்றினை விடுக்காது வருகை தராதவிடத்து பதவி இரத்தாகியதாக் கருதப்பட வேண்டும் ;

(ஏ) கட்டுப்பாட்டு அதிகார சபையானது ஆகக் குறைந்தது, மாதமொன்றுக்கு ஒருமுறையாவது கூட வேண்டும்.

5. (அ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் முத்திரை தவிசாளரின் பொறுப்பில் இருக்க வேண்டும் ; கட்டுப்பாட்டு அதிகார சபையின் முத்திரை.

(ஆ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் முத்திரையானது கட்டுப்பாட்டு அதிகார சபை தீர்மானிப்பதற்கு ஏற்ப தயாரிக்கப்பட முடியும் ;

(இ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் முத்திரை கட்டுப்பாட்டு அதிகார சபையின் இரு அங்கத்தவர்கள் முன்னிலையில் அன்றி எந்தவொரு சாசனம் ஒன்றில் அல்லது ஆவணம் ஒன்றில் அல்லது உடன்படிக்கை ஒன்றில் இடப்படாததுடன், மேலும் வருகை தந்துள்ளதற்கு சாட்சியாக அந்த இரு அங்கத்தவர்களும் அந்த சாசனத்தில் அல்லது ஆவணத்தில் அல்லது உடன்படிக்கையில் ஒப்பமிட வேண்டும். அங்கத்தவர்களுள் ஒருவர் அதிகார சபையின் தவிசாளராக வேண்டும்.

## *II* ஆம் பாகம்

### கட்டுப்பாட்டு அதிகார சபையின் நோக்கம், அதிகாரம், பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

6. (1) கட்டுப்பாட்டு அதிகார சபையின் நோக்கம் பின்வருமாறு அமைதல் வேண்டும் :- நோக்கம்.

(அ) மாகாண அழகியல் கலையரங்கத்தை முகாமைத்துவம் செய்தல், பராமரித்தல் ;

(ஆ) மாகாணத்தினுள் நாடகங்களைக் காண்பித்தல், சங்கீத காலசார வினோத நிகழ்ச்சிகளை ஊக்கப்படுத்தல் மற்றும் மேம்பாடு செய்தல் ;

(இ) கலாசார மற்றும் கலை நடவடிக்கை தொடர்பான அறிவு, தெளிவு மற்றும் அதன் பயன்பாட்டினை மேம்படுத்துதல் மற்றும் அதிகரித்தல் ;

(ஈ) மேல் மாகாணத்தினுள்ளும் மற்றும் ஏனைய மாகாணங்களுடனும் கலாசார அம்சங்கள் நிறைந்த நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல், அறிவினைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் ஒருங்கிணைத்த நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

*கட்டுப்பாட்டு அதி கார சபையின் அதிகாரங்கள் விடயங்கள் மற்றும் பணிகள்.*

7. கட்டுப்பாட்டு அதிகார சபையின் அதிகாரங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும் கீழே காட்டப்பட்டவாறு அமைதல் வேண்டும்.

(அ) இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்கு இணங்கி வகையில் கிடைக்கும் நிதிகள் மற்றும் பொருட்களிலான மானியங்கள் பரிசு அல்லது நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உபயோகித்தல் ;

(ஆ) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் கட்டுப்பாட்டு அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உதவி நிதி, நன்கொடை மற்றும் புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொடுத்தல் ;

(இ) இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்தல், பதவி உயர்த்தல், சேவையில் இருந்து பதவி இறக்கல், ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் ஏனைய பலாபலன்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல் ;

(ஈ) மாகாண அழகியற் கலையரங்கத்தைப் பராமரிப்பது சம்பந்தமான கட்டணங்களை வரையறை செய்தல் ;

(உ) நிதி முதலீடு, நிதி பயன்பாடு மற்றும் வங்கி நடவடிக்கை போன்ற நிதி நடவடிக்கைகளுக்காக கட்டுப்பாட்டு அதிகார சபையின் நடவடிக்கை செயற்பாடு தொடர்பான எல்லா விடயங்களுடனும் தொடர்புபடுத்தல், உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைத்தல் மற்றும் ஆராய்ந்து பார்த்தல் ;

(ஊ) உத்தியோகத்தர்களின் மற்றும் ஊழியர்களின் ஊதியம், சேவை நிபந்தனை மற்றும் மாகாண அரச சேவையின் ஆட்சேர்க்கும் திட்டத்தை மேல் மாகாண ஆளுநரின் அனுமதியுடன் மேற்கொள்ளல் ;

(எ) மேல் மாகாண சபையின் ஏதாவது உத்தியோகத்தர் ஒருவரை உரிய உத்தியோகத்தரின் விருப்பத்துடன் மற்றும் நியமன உத்தியோகத்தரின் இணக்கத்துடன் கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு இணைத்துக் கொள்ளல் ;

(ஏ) தனது நோக்கத்தினை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதை இலகுபடுத்தும் பொருட்டு கட்டுப்பாட்டு அதிகார சபையின் முடிவின்படி நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகள் உள்ளிட்ட வேறு அவ்வாறான எல்லாவற்றையும் மேற்கொள்வதற்கு கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு அதிகாரம் இருக்க வேண்டும் ;

(ஐ) மேல் உள்ள பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மேற்கொள்வதற்கு எடுக்கும் எந்தவொரு நடவடிக்கை ஒன்றுக்காகவும் கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

### *III* ஆம் பாகம்

### கட்டுப்பாட்டு அதிகார சபையின் பணியாட்தொகுதி

*பணிப்பாளரை நியமித்தல்.*

8. (1) கட்டுப்பாட்டு அதிகார சபையினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் ஒருவர் முழுநேரமும் கடமையில் இருக்க வேண்டியதுடன், அவர் கட்டுப்பாட்டு அதிகார சபையின் வழிநடத்தலின் கீழ் ஒவ்வொரு வேளையிலும் செயற்பட வேண்டும்.

(2) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளர் கட்டுப்பாட்டு அதிகார சபையின் செயலாளராகச் செயற்படவேண்டியதுடன், அவருக்கு கட்டுப்பாட்டு அதிகார சபைக்காக வாக்களிக்கும் உரிமை ஒன்று இல்லாததுடன், கருத்தினைத் தெரிவிப்பதை மட்டும் செய்ய இயலும்.

(3) பணிப்பாளரின் நியமனத்தை நிறைவு செய்வது அவசியம் என கட்டுப்பாட்டு அதிகார சபை கருதினால் அமைச்சரின் அங்கீகாரத்துடன் கட்டுப்பாட்டு அதிகார சபையினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறு மேற்கொள்ள இயலும்.

*பணிப்பாளருக்கு உரிய அதிகாரங்களும் விடயங்களும்.*

9. பணிப்பாளருக்கு பின்வரும் அதிகாரங்கள் உரியதாகும் :-

(அ) கட்டுப்பாட்டு அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை மற்றும் செயற்பாடுகளை நடைமுறைக்கிடுதல் ;

(அ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் பொது ஏற்பாடுகளின் கீழ் நடவடிக்கைகளை நிர்வகித்தல் மற்றும் பணியாட்தொகுதியினரை மேற்பார்வை செய்தல் ;

(இ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் கூட்டங்களுக்குரிய நிகழ்ச்சி நிரல்களைத் தயாரித்தல் மற்றும் நியதிச் சட்டத்தின் கொள்கைகள் மற்றும் ஏற்பாடுகளை நடைமுறைக்கு இடுவதற்குத் தேவையானதென அவரினால் கருதப்படும் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு சமர்ப்பித்தல் ;

(ஈ) கட்டுப்பாட்டு அதிகார சபையினால் அவருக்கு ஒப்படைக்கப்படும் அல்லது பணிக்கப்படும் வேறு அதிகாரங்கள் அல்லது காரியங்களை நடைமுறைப்படுத்துதல் அல்லது மேற்கொள்ளல்.

## IV ஆம் பாகம்

### நிதி

10. (1) கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு கட்டுப்பாட்டு அதிகார சபையின் பெயரில் நிதியம் ஒன்று இருக்க வேண்டும். கட்டுப்பாட்டு அதிகார சபையின் நிதியம்.

கட்டுப்பாட்டு அதிகார சபையின் நிதியத்திற்கு கீழே குறிப்பிடப்படும் நிதி செலுத்தப்பட வேண்டும்.

(அ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் உபயோகத்திற்காக காலத்திற்கு காலம் மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்படும் எல்லா நிதிகளும் ;

(ஆ) கட்டுப்பாட்டு அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் சேவை அல்லது வழங்கப்படும் வசதிகள் சம்பந்தமாகக் கட்டணமாக அல்லது தனது அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் போது மற்றும் பணிகளை மற்றும் கடமைகளை மேற்கொள்ளும்போது அதிகார சபைக்கு கிடைக்கப்பெறும் எல்லா நிதிகளும் ;

(இ) இலங்கையிலோ அல்லது அதற்கு வெளியிலிருந்தோ அல்லது ஏதாவதொரு வழியில் கடன், நன்கொடைகள், பரிசில்கள் அல்லது மானியங்களாக கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு கிடைக்கப்பெறும் எல்லா நிதிகளும்.

(2) தனது அதிகாரத்தினை பிரயோகிக்கும் போதும், செயற்படுத்தும்போதும் மற்றும் விடயங்களை மேற்கொள்ளும் போதும் கட்டுப்பாட்டு அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் ஏதாவது செலவினம் எதையும் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான எல்லா நிதிகளும் கட்டுப்பாட்டு அதிகார சபையின் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட முடியும். நிதியத்தில் இருந்து மேற்கொள்ள வேண்டிய செலவு.

(3) கட்டுப்பாட்டு அதிகார சபையின் ஆரம்ப மூலதனம் ரூபா ஐந்து மில்லியனாக வேண்டும். ஆரம்ப மூலதனத்தை அமைச்சர் வினவி, நிதி விடயப்பொறுப்பு அமைச்சரால் தீர்மானிக்கப்படும் தவணைக் கட்டணங்களில், மாகாண சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்படவேண்டியதுடன் (1) உப பிரிவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்திற்கு அந்த நிதி வரவு வைக்கப்பட வேண்டும்.

(4) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அதிகார சபையின் பொறுப்புக்களைத் தீர்க்க அல்லது கட்டுப்பாட்டு அதிகார சபையின் விடயங்களை மேற்கொள்வதற்கு கட்டுப்பாட்டு அதிகார சபைக்குத் தேவையான நிதியை மேலதிகப்பற்று ஒன்றாக அல்லது வேறொரு முறையில் கட்டுப்பாட்டு அதிகார சபையினால் அமைச்சரின் விருப்பத்துடன் அல்லது அவரினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு பொது அங்கீகாரம் ஒன்றின் நியமத்திற்கு இணங்க தற்காலிகமாகக் கடனாக பெற்றுக்கொள்ள இயலும்.

எப்படியிருப்பினும், இந்த உபபிரிவின் கீழ் கட்டுப்பாட்டு அதிகார சபையினால் பெறப்பட்ட ஏதாவதொரு தற்காலிக கடன் ஒன்று தொடர்பாக ஏதாவது சந்தர்ப்பம் ஒன்றில் செலுத்துவதற்கு உள்ள நிதியின் கூட்டுத்தொகை அமைச்சரினால், நிதி விடயப் பொறுப்பு அமைச்சரை வினவி தீர்மானிக்கப்படும் நிதிக்கு மேற்படலாகாது.

11. (1) கட்டுப்பாட்டு அதிகார சபையின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாக வேண்டும்.

(2) கட்டுப்பாட்டு அதிகார சபையின் நிதியத்தின் பொறுப்பு, அந்த நிதியத்திற்கு நிதியினைச் செலுத்தல், கணக்கு வைப்பு, வரவு செலவு மதிப்பீட்டுத் தயாரிப்பு மற்றும் அந்த விடயங்களுடன் தொடர்புடைய அல்லது இணைந்த வேறு எல்லா விடயங்களும் அமைச்சரினால் இயற்றப்படும் விதிகளின் மூலம் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

12. (1) கணக்கின் கணக்காய்வு தொடர்பாக அரசியல் அமைப்பின் 154 ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகள் உரியதாக வேண்டும். கணக்கு கணக்காய்வு.

(2) நிதியத்தின் கணக்கு மற்றும் அது தொடர்பான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையின் பிரதி ஒன்று அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவரினால் அது கட்டுப்பாட்டு அதிகார சபையின் வருடாந்த அறிக்கையுடன் மாகாண சபையின் முன்னிலையில் சமர்ப்பிப்பதற்கு வழி செய்யப்படவேண்டும்.

## *V ஆம் பாகம்*

### பொது ஏற்பாடுகள்

*13. (1)* கட்டுப்பாட்டு அதிகார சபையின் எல்லா உத்தியோகத்தர்களும் மற்றும் ஊழியர்களும் தாபனக் கோவையின் II ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்குள் உள்ளடங்குவதுடன் தண்டனை கோவையின் ஏற்பாடுகள் தொடர்பாகவும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களாகக் கருதப்பட வேண்டும்.

*(2)* கட்டுப்பாட்டு அதிகார சபை இலஞ்ச சட்டத்தின் பொருள்கொள்ளலுக்கு இணங்க அட்டவணைப்படுத்தப்பட்ட தாபனம் ஒன்றாகக் கருதப்பட வேண்யடிதுடன் அந்தச் சட்டத்தின் எற்பாடுகள் அதற்கு இணங்க உரியதாக வேண்டும்.

*விதிகளை தயாரிக்கும் அதிகாரம்.*

*14. (1)* இந்த நியதிச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த, அதிகாரப்படுத்த மற்றும் கட்டணங்களை அறவிட கீழே குறிப்பிடப்படும் எல்லா விடயங்கள் அல்லது அவற்றில் ஒன்று தொடர்பாக இந்த நியதிச் சட்டத்தினால் ஒப்படைக்கப்படும் அதிகாரங்களுக்குப் பதிப்பொன்று இல்லாது இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க விதிகளைத் இயற்றுவது அமைச்சரினால் மேற்கொள்ள இயலும்-

(அ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் கூட்டங்களை நடாத்த வேண்டிய முறையினைத் தீர்மானித்தல் மற்றும் கூட்டம் நடத்தப்பட வேண்டி முறையை வரையறை செய்தல் ;

(ஆ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற ரீதியில் பணிப்பாளரின் அதிகாரங்கள் மற்றும் விடயங்கள் ;

(இ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கை ஒழுங்குவிதிகள் ;

(ஈ) கட்டுப்பாட்டு அதிகார சபையின் நோக்கம், அதிகாரம், பணிப்புகள் மற்றும் பொறுப்புக்களை மேற்கொள்ள மற்றும் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் எடுக்கக் கூடிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும்;

(ஊ) ஆலோசனைக் குழுவின் நடவடிக்கை தொடர்பான நடவடிக்கை ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளைத் தயாரித்தல்.

*(2)* இந்தப் பிரிவின் கீழ் அமைச்சரினால் இயற்றப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டியதுடன் அவ்வாறு பிரசுரிக்கப்படும் நாள் அல்லது அந்த விதியில் குறிப்பிடப்படும் பின்னரான ஏதாவது தினம் ஒன்றில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

*(3)* அமைச்சரினால் இயற்றப்படும் ஒவ்வொரு விதியும் அது வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பின் மூன்று மாத காலத்தினுள் அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதாவதொரு கட்டளை ஒன்று அது அங்கீகரிக்கப்பட்ட தினத்தில் இருந்து நீக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும். எனினும் அதன் கீழ் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது ஒன்றுக்கு இதனால் பாதிப்பொன்று நிகழக்கூடாது.

*பொருள் கொள் ளல்.*

*15.* பதங்கள் தொடர்பாக அர்த்தம் ஒன்று தேவைப்பட்டால் ஒழிய இந்த நியதிசட்டத்தில்

"அமைச்சர்" என்பது, மேல் மாகாண சபையின் கலாசார விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற கருத்தாகும்.

"நிதி அமைச்சர்" என்பது, மேல் மாகாண சபையின் நிதி விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற கருத்தாகும்.

"அமைச்சு" என்பது, மேல் மாகாண சபையின் கலாசார விடயப் பொறுப்பு அமைச்சு என்ற கருத்தாகும்.

"அமைச்சின் செயலாளர்" என்பது, மேல் மாகாண சபையின் கலாசார விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் என்ற கருத்தாகும்.

"தாபனக் கோவை" என்பது, அரச உள்நாட்டு அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள தாபனக் கோவையின் II பாகம் என்ற கருத்தாகும்.

*ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள உரைப் பிரதியே வலுவுடையதாக வேண்டும்.*

*16.* இந்த நியதிச் சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய உரைகளுக்கிடையில் ஏதாவது ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள உரையே வலுவுடையதாக வேண்டும்.

*4- 251*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.